5 FEB 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 21 வெள்ளிக்கிழமை (04 - 02 - 2000) VALAMPURI ஒலி: 47

## 52-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தும்

# குண்டுவெடிப்பில் 35பேர் வரை காயம்

## உயிரிழப்புக்கள் இல்லை

இன்று இலங்கையின் 52வது சுதந்திர தினக்கொண்டாட்டங்களை அமைதியான எளிய முறையில் நடாத்துவதற்கு அரசு தீவிரபாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தபோதும் நேற்றையதினம் மூன்று முக்கிய இடங்களில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களினால் 35பேர் வரையில் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அந்தந்தப்பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஊறு கொடவத்த என்னும் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது பஸ்ஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 35 பேர்கள் வரையில் காயமடைந்திருந்தனர்.

அடுத்தகுண்டுவெடிப்பாக, குருநாகலில் இருந்து பொல்காவலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டி பத்துரகல்லவை அண்மித்ததும் இக் குண்டுவெடிப்பு இடம் பெற்றது.

இக் குண்டு வெடிப்பில் பாடசாலை மாணவர்கள் உட்பட 75 பேர் வரையில் காயமடைந்திருந்தனர். இக் குண்டு வெடிப்பு நேற்று மாலை 5.45 மணிக்கு இடம் பெற்றது.

கடாவத்தைப் பகுதியில் நேற்றிரவு 8.15 மணிக்கு இடம் பெற்ற இக் குண்டு வெடிப்பில் 17 பேர் வரையில் காயமடைந்திருந்தனர்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி ஜனநாயக அரசியலுக்கு விரோதமானமுறையில் செல்கிறது

### மாற்றுக் குழு சரத் அமுனுகம

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை ஜனநாயக விரோதமான முறையில் செயல்படுகிறது என்பதை நேற்று வழங்கப்பட்ட மேல் நீதிமன்றத் தீர்ப்பு எடுத்துக் காட்டுவதாக அமைகிறது என்று ஐக்கிய தேசியக்கட்சி மாற்றுக்குழு அங்கத்தவரும் அமைச்சருமான கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மேற்படி தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலிருந்து ரணில் விக்கிரம சிங்கவைநீக்குவது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## களுத்துறைச்'சிறைக்கைதி சிறிகுமார் துப்பாக்கிச் சூட்டிற்கே மரணமானார்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது மரணமான சிறிகுமார் துப்பாக்கியினால் சுடப்பட்டு மரணமானார் என்று அவரது மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து இது தொடர்பான விசாரணையில் பசுபதி தர்மராசா, சற்குணம் ஆகிய இருவரும் அளித்த சாட்சியங்களின் அடிப்படையிலேயே சிறிக்குமார் சுட்டுக் கொல்லப்பட்டதாக மரண விசாரணையின் போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுதூதுவர்கள் வன்னிக்கு விஜயம் 'மேற்கொள்ள வேண்டும்

### வன்னிபிரஜைகள் குழு கோரிக்கை

(வவுனியா)

இலங்கைவரும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் வன்னிமக்களின் உண்மை நிலை அறிய அங்கு கட்டாயம் விஜயம் செய்ய வேண்டும்.

வன்னி மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பாளருக்கு எழுதியகடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்: வடக்கு-கிழக்கு நிலையை அறிய வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வவுனியாவுடன்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## அநியாயஉயிரிழப்புக்களை தவிர்ப்பதற்காக மேயர்பதவியை இராஜினாமா செய்கின்றேன்

### செல்லன் கந்தையன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்தடுத்து இரு மேயர்களை இழந்த நிலையில் தொடர்ந்தும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்கும் முகமாக யாழ்.மாநகர மேயர்பதவியைதான் இராஜிநாமா செய்வதாக செல்லன் கந்தையன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர மேயராக இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தெரிவித்ததையடுத்து 'வலம்புரி' செய்தியாளர் தொடர்பு கொண்டு கேட்டபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்

(6 ஆம் க்கம் ப பார்க்க)

## வவுனியா தபாலக குண்டுவெடிப்பு மேலும் ஒருபெண் ஆஸ்பத்திரியில் மரணம்

(வவுனியா)

வவுனியா பிரதம தபாலகக் குண்டு வெடிப்பின் போது காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிதம்பரபுரத்தைச் சேர்ந்த மோகனபாலன்கலைச்செல்வி மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

இவரது கணவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது தேறிவருவதாக கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சப்பாத்தினுள் வெடிகுண்டை கடத்த முற்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்

சப்பாத்தினுள் வெடிகுண்டுகள் மற்றும் வெடிக்க வைக்கும் உபகரணங்களை கடத்த முயன்ற நபர் ஒருவர் காரைதீவில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இக்குண்டை கொழும்பிற்கு கடத்த திட்டமிட்டதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்ததாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கைது செய்யப்பட்டதையடுத்து இப்பகுதியில் புலன் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டதாகவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

## காங்கேசன்துறை தடுப்பு முகாமில் 11பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகால தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதுசெய்யப்பட்ட 11பேர் காங்கேசன்துறை தடுப்புக் காவல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் காங்கேசன்துறை சென்றிருந்த யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 8 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவர் என்று தெரிவித்துள்ள அவர் 1999ஆம் ஆண்டு டிசம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னம்பிட்டி மக்களின் அ. அட்டைகள் பறிமுதல் செய்யப்படமாட்டாது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு—கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னம்பிட்டி சோதனைச் சாவடியில் இனிமேல் பரிசோதனைக்காக பொது மக்களின் தேசிய அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்படமாட்டாது எனபொலநறுவை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தொல்லை தவிர்ப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இது விடயம் சம்பந்தமாக தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயலர் ஏ. ரி. எம். டீன் மட்டக்களப்பு தமிழர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுவர் பாதுகாப்பு நிதிய ஏற்பாட்டில் நடந்த யாழ். சிறுவர் அரங்கக் குழுவினரது பயணம்

## ஓர் அனுபவப் பகிர்வு

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் (ஐ. இ) அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராதபுரம், திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்ட சிறுவர்களுடனான பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவப் பகிர்வு நேற்றும் இன்றும் இங்கு பிரசுரமாகிறது.

ஜெ. தற்பரன்
சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.)
யாழ்ப்பாணம்.

சிறுவர்கள் என்றால் என்ன அவ்வளவு இளக்காரமா? நிறையவே முற்போக்குச் சிந்தனையுடையவர்கள் என்பதனை இவ்வாறாக நிரூபித்தே விட்டனர். படையப்பா படத்தின் மின்சாரக்கண்ணா பாடலினையும் கலோ, கலோ பாடலினையும் பல தடவை பாடினாலும் அதில் வரும் இடைக்குரல்களினை ஆங்காங்கு பலரும் மாறி, மாறி இடைவிடாது பாடிக் கொண்டே இருந்தனர்.

இவ்வாறாக மகிழ்வுடன் பயணித்த குழுவினர் திருகோணமலை சென்றடைந்து அங்கு நடைபெற்ற ஊர்வலத்திலும் ஐ. நா. சிறுவர் உரிமைகள் சமாசத்தில் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும் பங்கு பற்றினர். இவ் விழாவிற்கு சிறுவர்களே தலைமை தாங்கினர். பிரதம விருந்தினர் கூட வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் புலமைப் பரிசிலில் 1ஆவது இடத்தைத் தட்டிக் கொண்ட சிறுமியே. நிகழ்ச்சிகளினை மும்மொழிகளிலும் உடனுக்குடன் அறிவிப்புச் செய்தமையும், எங்கும் எதிலும் சிறுவர்கட்கு தனி முன்னுரிமை தனிமவுசு என்பது போல் அமர்வுகள் யாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் பாராட்டப்பட வேண்டியதே. நாம் உணவுப்பாசல் பெறுவதற்கும் சோடா குடிப்பதற்கும் சிறுவர்களினை கூடவே அழைத்துச் செல்ல வேண்டிய தேவை இருந்தது. மேடையில் இடையிடையே பெரியவர்களைப் பேச அனுமதித்தார்கள். முதல் நாள் நிகழ்வில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்திருந்த சிறுவர்களது நாடகங்களும், பேச்சுக்களும், கவியரங்குகளும், வில்லிசைகளும் காலை முதல் மாலை வரை கோணேச்சரம் கோவில் முன்றலில் அமைந்திருந்த மைதானத்தில் நடைபெற்றது. மறுநாள் அனைத்துச் சிறுவர்களுக்கும் மாவட்ட ரீதியாக தமது பிரச்சனைகள் ரீதியாகவும் அவற்றிற்கான சாதகமான தீர்வுகள் தொடர்பாகவும் குழுநிலையில் கலந்துரையாடி அவற்றின் பின்பு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முன்வைத்தனர். பலரும் இதில் ஆர்வமாகப் பங்கு பற்றி பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்தாலும் அனைவருமே யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் வலியுறுத்தப் பட வேண்டும் என்பதனை அதுவும் சிறுவர்களினாலேயே முன்வைக்கப் பட வேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறினர்,

தமிழ், முஸ்லிம், சிங்களம் என இன மொழி பேதங்கள் மறைந்து இன்று போல் ஒருமித்துக் குரல் எழுப்பினால் அரசியல் வாதிகளினாலும் ஆட்சிக்காரர்களினாலும் எம்மை என்ன செய்ய முடியும் என அனைவரும் ஒருமித்தவாறு கேள்வி எழுப்ப பெரியவர்கள் தாம் விட்ட தவறினை உணர்ந்தவர்களாகவோ என்னவோ திகைத்து விக்கித்துப் போய் இருந்தனர். இவ்வாறாக மூன்று தினங்களினை அனுராதபுரத்திலும் பின் இரு தினத்தினை திருகோணமலையிலும் மகிழ்வாக நகர்த்திய இக்குழு ஆறாம் நாள் கொழும்பு நோக்கி பஸ்சில் பயணமானார்கள். மீண்டும் நடனம், பாடல் பஸ்சையும் சாரதியையும் கூட ஆடச் செய்தனர். ''வாட்டர் போட்டிலை'' தூக்கிக் குடித்தவாறே ''கிக்கு ஏறுதே.. எனவும் ''என்னடி கோதை உன் வெல்வெட்டு உடுப்பு எம் நெஞ்சு துடிக்குதில்லை'' எனவும் கவிஞர்கள் முளைவிடத் தொடங்கினர். இவர்களுக்கு பக்க பலமாக ஷா. உமா உட்பட நாமும் களமிறங்க சிறுவர்கள் பயங்கர குஷியாகி விட்டனர். பஸ்சின் வேகம் குறைய வானொலிக்கு போகும் மின்சாரத்தின் அளவு குறைவடைந்து கஸட் இழுபடுவது போலவும் பின்பு வேகமாக பழைய நிலையில் பாடுவதும் என புதுப்பழக்கத்தில் பாடல் இசைக்கலானோம்.

இவ்வாறாக கொழும்பு செல்லும் வழியில் தம்புள்ள என்னும் இடத்தில் அமைந்துள்ள மிகவும் பிரபல்யமான ஹோட்டலில் (Culture Club) மதிய உணவை உட்கொண்டு அங்கிருந்தவாறே மிகுந்தல சிகிரியாவின் அமைப்புத் தோற்றத்தினை தொலைவிலே பார்த்த பின்பு பயணம் தொடர்ந்து 9 மணியளவில் கொழும்பை சென்றடைந்த போது மீண்டும் இவர்களை உற்சாகப் படுத்துவதற்காக 25 புதிய சிங்கள நண்பர்கள் தயாராக இருந்தனர். நீண்ட நெடிய பயணத்தில் களைப்புற்று இருந்தாலும் அவர்களுடன் அளவளாவி ஒவ்வொருவரை துணைக்கு அழைத்துக் கொண்டு தமக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறைகட்கு திரும்பினர். மறுநாள் பாராளுமன்றம் சென்று அமைச்சர்களிடம் தமக்குள்ள பிரச்சினைகளினை முன்வைத்தனர். பாராளுமன்றமொழி பெயர்ப்பாளர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். சிறுவர்கள் குழு ஒன்று அமைச்சர்களினைச் சந்திப்பது அதுவும் பாராளுமன்றத்தில் சந்திப்பது இதுவே முதல் தடவை என்றே எண்ணுகின்றோம். சிறுவர்களினால் முன்வைக்கப்பட்டபல பிரச்சனைகளில் சில வருமாறு.

(1) பாடசாலைக்குச் செல்லக் கூட வசதியற்ற ஏழ்மை நிலையில் உள்ள பிள்ளைகள் சிறுவர்கள்

(2) மாணவர்களுக்கான இலவச மதிய உணவு:- முன்பு வழங்கப்பட்டு பின்பு நிறுத்தப்பட்டது. தற்போது பல மாணவர்கள் பாடசாலை வேளையின்போது மயங்கி வீழ்வதுடன் போசாக்கு குறைவானவரது எண்ணிக்கையும் நாளாந்தம் கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது.

(3) சேதமடைந்துள்ள பாடசாலை, கல்விசார் கட்டடங்களினைப் புனரமைப்புச் செய்தல்.

4 பெரும்பாலான பாடசாலைகளில் சிங்களப் புத்தகம் வழங்கப்பட்டிருப்பினும் சிங்கள ஆசிரியர்கள் இல்லை, அதேபோல தமிழ் ஆசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளில் இல்லை.

(5) நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து சிறுவர்களினை காப்பாற்ற நடவடிக்கைகளினை எடுத்தல். கைது செய்யப்படும் போது பெரியவர் கட்கும் அறியச் செய்தல்/ உடனிருக்க வைத்தல், அடையாள அட்டை இல்லாது போனாலும் பாடசாலைக்கு செல்வதாயின் தொடர்ந்தும் அனுமதித்தல் போன்றன.

இப்படியாக தமக்கே உரியதான பிரச்சினைகளினை முன்வைத்தனர். இதே கருத்துக்களினையே பிறிதொரு நாளில் சந்தித்த மனித உரிமைகள் குழுவினரிடமும் தெரிவித்தனர். மறுநாள் கிரிக்கெட் வீரர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடிபுகைப் படமும் எடுத்துக்கொண்டனர். முரளி சரளமாக தமிழிலும் சனத், சொய்சா, கழுவிதாரனா, ஜெயவர்த்தனா, நிஸங்க உட்பட பலரும் தமக்குத் தெரிந்த தமிழிலும் சிங்களத்திலும் கதைத்தனர். ஆங்காங்கு கையினைப் பிடித்து கூட்டிவந்து மொழிமாற்றம் செய்யவும்வேண்டிநின்றனர். சனத்துடன் நீண்டநேரமாக ஏதோ சக நண்பர் போலவே தட்டித்தட்டி கதைத்தனர். 'நீங்க யாழ்ப்பாணம் வாறிங்களா?' ஆ! அதுக்கென்ன வாறன். அடுத்த வருஷம் யாழ்ப்பாணம் சென்றால் கிறவுண்ஸில் விளையாடுவமா? எனவும் உங்களுக்குக் கிரிக்கெட் என்றால்அவ்வளவு விருப்பமா? என சனத் வினவ ''ஓ'' நிறைய அதுவும் நீங்கள் விளையாடுவதைப் பார்க்க நிறையவே சந்தோஷம் என்றனர். இடையே குந்திஇருந்தவாறு கதைத்த சனத்தின்தலையை' 'முத்து'' என்னும் சிறுவன் தடவி மொட்டை என்று கூறவும் அனைவரும் கொல் என்று சிரிப்பு சிரிக்க அவர்களுடன் இணைந்து சனத் ஜெயசூரியாவும் தான் ஒரு கிரிக்கெட் குழுத் தலைவர் என்பதனையும் தூர எறிந்து சிறுவனாக மாறிமகிழ்ச்சியாகஇருந்தார். இதனை 'சனத் யாழ்.போகப் போறார்' என்ற தலைப்புடன் வர்ணப் புகைப்படம் போட்டு திவயின பத்திரிகை பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறு நாட்களில் ஒலிபரப்புக் கூடம் ஒன்றுக்கும் உஸ்வத்த எனப்படும் சிறுவர்கட்கு பிடித்தமானரிப்பிரிப்பி செய்யப்படும் தொழிற்சாலைக்கு சென்று பார்வையிட்டும் நாளாந்தம் இரவு வேளைகளில் மாஜிக்ஷோ இசை நிகழ்ச்சி என ரொம்பவும் ஹாயாக இவர்களது பயணங்கள் அமைந்திருந்தது. இவ்வாறாகக் கொழும்பில் 8 நாட்களினை மெதுமெதுவாக நகர்த்தி இருந்தனர். சிறுவர்களுக்காக இயங்கும் நிறுவனங்களான SCF. UNICEF, CHLD RIGHTS GROUP போன்ற அலுவலகங்களுக்குப் புறக்கோட்டை நகரப் பகுதி, விஹாரமஹாதேவிப் பூங்கா, நூதனசாலை, பொன்னம்பலவாணேச்சரம், கொச்சிக்கடை அந்தோனியார் கோவில், மிருகக்காட்சிச் சாலை என அனைத்து இடங்களுக்கும் தமது நாட்களினை பிரயோசனமான முறையில் நகர்த்தி இருந்தனர். யாழ். நோக்கி புறப்படுவதற்கு முதல் நாளன்று தீபாவளி. அந்நாளினை தமிழர் ஒருவரது வீட்டில் கொண்டாடுவதற்காக தொழிலதிபர் ஒருவரது வீட்டுக்குச் சென்று அங்கு பட்டாசுகள், மத்தாப்புக்கள் கொழுத்தி ஆரவாரமாக அந்நாளினைக் கொண்டாடி இரவு உணவுடன் தமது இருப்பிடங்களிற்குத் திரும்பினர். கொழும்பு சிங்கள நண்பர்களையும் அழுதவாறே பிரிந்து விட்ட துயரில் மறுநாள் யாழ். திரும்புவதற்காக தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டனர். தத்தமது வீட்டுக்குச் சென்றுவிட்ட பின்பும் அநேகமான கொழும்பு நண்பர்கள் மீண்டும் தமது நண்பர்களைச் சந்திப்பதற்காக வாடகைக் கார்களிலும் வாகனங்களிலும் வந்து சென்றது யாழ்ப்பாணச் சிறுவர்களுக்கு மீண்டும் பிரிவுத்துயரினை அதிகமாக்கினாலும் ''திரும்பியாக வேண்டுமே'' என்கிற நிலையில் இரத்மலானை விமான நிலையம் சென்று விமானம் மூலம் பலாலியை அடைந்து தத்தமது வீட்டுக்கு திரும்பினார்கள்.

சிறுவர்கள் அனைவருக்கும் புதிய அனுபவமாக மட்டுமன்றி பல புதிய தகவல்கள்/ விடயங்களினை பலரும் பெற்றுக் கொள்ள இவ்வாறான அனுபவங்கள், ஏற்பாடுகள் யாழ். மாவட்டச் சிறுவர்கட்கு தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் என்பதுவே பலரது எதிர்பார்ப்பும். நடைபெறுமா? என பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

(முற்றும்)

# மாற்றுஅணியை ஐ.தே.க.விலிருந்து நீக்கப்பட்டமை சட்டத்திற்கு முரண்

## கொழும்பு உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கலாநிதி சரத் அமுனுகம உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று அணியினர் விலக்கப்பட்டது சட்டத்திற்குப் புறம்பான செயல் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பதில் பிரதம நீதியரசர் கலாநிதி ரஞ்சித் அமரசிங்க தலைமையிலான கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா, அமீர் இஸ்மாயில் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு, நேற்று உயர் நீதிமன்றத்தில் மேற்கண்ட தீர்ப்பினை வழங்கியது.

எந்தவிதமான காரணங்களும் இல்லாமல், தமது நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறுவதற்கே அவகாசம் வழங்கப்படாமல் மாற்று அணியினை கட்சியில் இருந்து நீக்குவதான ஐக்கியதேசியக் கட்சியினரின் நிர்வாகக் குழுவின் முடிவு, சதாரண சட்டத்திற்கும் கட்சியின் யாப்பு விடுதிகளுக்கும் முரண்பாடானதொன்று எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

கலாநிதி சரத் அமுனுகம, விஜயபால மெண்டிஸ், லங்காமத்யூ சிசில் முனசிங்க, சூலபண்டார ஆகியோர் தம்மை கட்சியில் இருந்து நீக்கியது தொடர்பான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே.

(க-9)

மந்திகை வைத்திய சாலை

# மன நோயாளர் சிகிச்சைப்பிரிவு வெகுவிரைவில் மூடப்படலாம்

(மந்திகை)

மந்திகை அரசினர்வைத்திய சாலையில் இவ்வளவு காலமும் சிறப்பாக இயங்கிவந்த மன நோயாளர் சிகிச்சைப்பிரிவு மூடவேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகதெரிவிக்கப் படுகின்றது.

மனநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வேண்டிய மருத்துவர்கள் இன்மையும் மருந்துத் தட்டுப்பாடுமே இந்த அபாயநிலை ஏற்படுவதற்குரிய காரணம் என சொல்லப்படுகின்றது.

தற்பொழுது இந்த வைத்தியசாலையில் இருபதிற்கும் மேற்பட்ட மனநோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், இவர்களுக்கு எந்த விதமான சிகிச்சையும் அளிக்கப்படாமையினால் இந் நோயாளர்கள் பெரிதும் அவதியுறுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்குமானால் மனநோயாளர்களின் நிலைமேலும் கவலைக்கிடமாக மாறலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (க-23)

ஜெயலலிதா மீதான தண்டனையை எதிர்த்து

# தமிழகத்தில் பெரும் வன்முறை வெடிப்பு

# 6 ஆயிரம் பேர் வரையில் கைதாகினர்

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர்செல்வி ஜெயலலிதாவிற்கு ஒரு வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து தமிழகம் முழுவதும் நேற்றும், நேற்றுமுன்தினமும் பெரும் வன் முறைகள் வெடித்தது இச் சம்பவங்களையடுத்து 6 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டனர்.

ஆங்காங்கே நடந்த பல்வேறு கல்வீச்சுச் சம்பவங்களில் 50 பேருந்து வண்டிகள் கடுமையாக சேத மடைந்துள்ளன. இதைவிட சுமார் 10 பேருந்துகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

இந்த வன்முறைச்சம்பவங்களில் அனேகமாக அ.இ.அ.தி.மு.க தொண்டர்களும் கட்சி உறுப்பினர்களுமே ஈடுபட்டிருந்ததனால் இதுவரை சுமார் 6000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வன்முறை சம்பவங்கள் தீவிரமடைந்திருப்பதை அடுத்து நேற்று முன் தினம் இரவு முதல் தொலை தூரம் பேருந்து சேவைகள் தற்காலிகமாக காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளன.

சென்னையில் பயணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பேருந்துமீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதேவேளை சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை குலைக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவற்றை சீர் குலைக்க முற்படுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-14)

## வெளியுறவு கொள்கையில் மாற்றம்

(கோலாலம்பூர்)

மலேசியா தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை மேற் கொள்ளப் போவதாக அந்நாட்டின் துணைப் பிரதமர் அப்துல்லா கடாபி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் வெளிநாட்டவர் மலேசியாவிற்கு வருவதனைக் குறைக்கு முகமாகவே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## அமைச்சர் பதவி நீக்கம்

இந்திய மத்திய அமைச்சர் செல்வி. உமாபாரதியின் பதவி விலகல் கடிதத்தினை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக் கொண்டுள்ளதை அடுத்து அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்' (க-14)

# குறொஸ்னியில் தாக்குதல் தீவிரம் துருப்பினர் மேலும் அனுப்பப்படுவர்

(மொஸ்கோ)

போர் நடைபெற்று வரும் செச்சினியாவின் தலைநகர் குறொஸ்னியில் போராளிகளின்தாக்குதல் உக்கிரமடைந்திருப்பதனால் மேலும் 3500 சிறப்புப் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பப்படவுள்ளதாக ரஷ்ய இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறிது காலம் தமது படை நிலைகளையும் படைகளையும் பலப்படுத்தும் நோக்கில் ஓய்வெடுத்திருந்த செச்னிய போராளிகள் மீண்டும் உக்கிரமாக போரிட்டு வருவதுடன் அகோரமான முறையில் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் ரஷ்ய படைநிலைகள்மீது முன்னேற முயற்சி செய்து வருகிறார்கள்.

ரஷ்யாவும் பதில்தாக்குதலாக விமானம் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு போராளிகளின் தாக்குதல் தந்திரோபாயத் திட்டங்களைத் தகர்த்தெறிந்து வருவதாகவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

## கோயம்புத்தூரில் 175 பேர் பொலிஸாரால் கைதாகினர்

(புதுடில்லி)

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட முனைந்த 175 அ.இ.அ.தி.மு.க தொண்டர்கள் பொலிஸாரால் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கட்சித் தொண்டர்களில் 10 பெண்களும் அடங்குவர்.

இதேவேளை கோயம் புத்தூரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையோடு பேருந்து போக்குவரத்துக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. (க-14)

## பயணிகள் பஸ் பள்ளத்தில் பாய்ந்ததில் 13பேர்பலி! 30பேர் காயம்!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் சுமார் 50 பிரயாணிகளுடன் பயணம் செய்துகொண்டிருந்த சிறிய ரகபேருந்து வண்டியொன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் அதில் பயணம்செய்த 13 பேர் பலியாகியதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

லாகூரிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த பஸ்வண்டி திடீரென ஏற்பட்டகோளாறு காரணமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டையும் மீறி அருகே உள்ள பள்ளமொன்றில் வீழ்ந்ததினாலேயே இக் கோரச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து விபத்து நடந்த இடத்திற்கு விரைந்த மீட்புப்பணியாளர்கள் காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைகளில் அனுமதித்துள்ள போதிலும் பலரது உடல்நிலை கவலைக்கிடமாகவே உள்ளது.

இந்த விபத்தில் பேருந்தினை ஓட்டிச்சென்ற சாரதியும் நடத்துநரும் அவ்விடத்திலேயே பலியாகினர் எனத் தெரியவருகிறது. (க-14)

# இந்திய வெளியுறவுச் செயலர் விரைவில் அமெரிக்கா பயணம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில் டளிங்டன் அடுத்தமாதம் இந்திய விஜயத்தை முன்னிட்டு இந்திய வெளியுறவு செயலர் விரைவில் வாஷிங்கின் பயணமாக உள்ளதாக புதுடில்லி அரசு நேற்று தெரிவித்தது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்க அதிபரின் பாதுகாப்பு மற்றும் இதர விடயங்கள் தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை கவனிக்கும் பொருட்டே செயலர் அமெரிக்கா பயணமாக உள்ளதாகவும் தெரிவித்தது.

இதேவேளையில் அமெரிக்காவின் உயர் மட்டக்குழுவொன்று இந்தியாவிற்கு ஏற்கனவே வருகை புரிந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் சரிந்து போய் இருக்கின்ற இந்திய-அமெரிக்க உறவை மீண்டும் கட்டியெழுப்புவதே தனது இந்தியப் பயணத்தின் முக்கிய நோக்கம் என அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் தெரிவித்திருக்கிறார்.

மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுடன் நீண்டகாலமாக நெருக்கமான உறவுகள் பேணப்படாமை குறித்து மிகவும் வருத்தமடைவதாகவும் குறிப்பிட்ட அமெரிக்க அதிபர்.

இந்திய விஜயத்தின் போது துணைக்கண்டத்தின் முக்கிய பிரச்சினைகள் குறித்தும், அணு ஆயுத உற்பத்தியை தடை செய்வது, மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராய விருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## பெண்ணின் கைத்தொலை பேசியின் அலறலை சகிக்காத நீதிபதி 4 மணிநேர சிறைத்தண்டனை விதிப்பு

(ஜோனஸ் பேர்க்)

தென்னாபிரிக்க நிதிமன்றம் ஒன்றின் நீதிமன்ற விசாரணைகள் நடந்துகொண்டிருந்தபோது அங்கிருந்த பெண்மணி ஒருவரின் கைத்தொலை பேசி எழுப்பிய மணியோசையினால் ஆத்திரமுற்ற நீதிபதி அப்பெண்மணிக்கு 4மணிநேர சிறைத் தண்டனை வழங்கியுள்ளார்.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் நீதிமன்றில் உள்ள அனைவரும் தமது கைத் தொலைபேசிகளை நிறுத்தி வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டிருந்த போதிலும் இப்பெண்மணி நீதிபதியின் சொல்லுக்கு செவிசாய்க்காது தொலைபேசியினை நிறுத்திவைக்காத தன் காரணத்தினாலேயே அவருக்கு இந்த குறுகியகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (க-14)

## எதியோப்பியாவில் தொடரும் பஞ்சத்தினால் பெருமளவினர் உயிரிழப்பு

(அபாஸ் அபாபா)

எத்தியோப்பியாவில் தொடரும் பஞ்சத்தினால் பெருமளவு உயிர் இழப்புக்கள் மற்றும் பட்டினி நிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது:

கிழக்கு ஒகடான் பகுதியில் பஞ்சம் காரணமாக 5 வயதிற்குட்பட்ட 6 குழந்தைகள் தினசரி பலியாகுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பருவகாலத்தில் மழை பெய்யாததாலேயே இப் பஞ்சம் ஏற்பட்டதாகவும் மனிதர்கள் மட்டுமன்றி கால் நடைகளும்கூட பெருமளவில் பலியாகுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்ச நிலை காரணமாக எதியோப்பியாவில் 85 பேர் மரணமடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## உலக வலம்

### மதுபானம் அருந்திய 9 பேர் உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷின் நரசிங்கி மாவட்டத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மதுபானம் அருந்திய 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் மதுபானம் அருந்திய 35 பேர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-9)


நீயெல்லவா எம் தலைவனாக இருந்தாய்
எங்கு நீ சென்றாய் குமார்
MAYU RAJINI JEWELL HOUSE
மயூ ராஜினி ஜுவல் ஹவுஸ்
இ. கணேசராசா
3/15, 1ம் ஒழுங்கை கேசாவில் பிள்ளையார் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கி/56)

கண்ணிமைப்பதற்குள் மறைந்தா!ய் குமார்
கலங்குகிறோம் எம் தலைவனே!
சரவணமுத்து கந்தசாமி அன் சன்
SARAVANAMUTTU KANDASAMY & SO
நகை தொழிற்சாலை
உரிமையாளர்: க. சிவகுமாரன்
609, 947, கே. கே. எஸ். வீதி,
தட்டதெரு, நாச்சிமார்கோயிலடி.
யாழ்ப்பாணம். (கி/55)

தமிழனைக் காப்பாற்ற இருந்த
தலைவா குமார் எங்கு சென்றாய் கலங்குகின்றோம்
காபறேற்றர் திருத்துபவர்
V. K. & SON
கஜன் தொலைத் தொடர்பு சேவை
628/3, கங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைத் தொடர்பு இலக்கம்
உள்நாடு: - 021 - 3198
வெளிநாடு: - 0094 - 21 - 3198
(கி/52)

# செய்தித் துளிகள்

## தருமப்பணம் வழங்கல்

(கல்வியங்காடு)

அஞ்சலகம் மூலமாக வழங்கப்படுகின்ற தருமப்பணம் 1ஆம்திகதி தொடக்கம் 5ஆம் திகதிக்குள்ளாக வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்தமாதம் முதல் மாதத்தில் 15 ஆம் திகதியே வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தினத்திலேயே அஞ்சலகத்தில் இப்பணத்தைப்பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (க-54)

## திருத்தப்படாத வீதிகள்

(நயினாதீவு)

பல ஆண்டுகளாக நயினாதீவுப் பகுதியிலுள்ள வீதிகள் யாவும் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதனால் அவ்வீதிகள் வழியாக பயணம் செய்யும் மக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இது பற்றி வேலணை பிரதேசசபை தலைவரிடம் முறையீடு செய்த போஎது இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. (க-76)

## அன்பளிப்பு

(அச்சுவேலி)

யாழ். இடைக்காடு மகா வித்தியாலய மின்சுற்று அமைக்கும் பணிக்கென பாடசாலையின் பழைய மாணவர்களால் 60 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியினைக் கொண்டு மின்சுற்று அமைக்கும் பணிகள் ஆரம்பமாகி விட்டதாகவும் வெகு விரைவில் மின் இணைப்பு வழங்கப்பட்டு விடும் எனவும் பாடசாலை அதிபர் வி. எஸ். சித்திர வடிவேல் தெரிவித்திருக்கிறார். (க-57)

## சங்கங்கள் இணைவு

(வடமராட்சி)

இதுவரை காலமும் தனித்தனியே இயங்கி வந்த வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், மாமுனை சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இதனால் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் நிதிகள் அனைத்தும் வெகு விரைவில் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அமைப்பின் செயலாளர். வி. தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (க-43)

## இலவச வைத்திய சிகிச்சை

(நெல்லியடி)

வடமராட்சி வயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி கரவெட்டி (அம்பம்) வைத்திய சாலையில் இலவச வைத்திய சிகிச்சையை நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்த சிகிச்சையில் கலந்து பயன் பெற விரும்புவோர் தங்கள் பெயர்ளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். (க-18-23)

## பாலம் திருத்தப்பட்டது

(மந்துவில்)

மந்துவில் கேலம் அம்பாள் கோவிலுக்குச் செல்லும் வீதியில், வேம்பிராய் வரணிக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் உள்ள பாலம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பாலம் திருத்தப் படுவதற்கு முன்னர் மழை காலத்தில் இதனூடாக பயணம் செய்ய முடியாது பொதுமக்களும் வாகனங்களும் பெருஞ் சிரமத்திற்குள்ளாகி வந்தனர் எனத் தெரிய வருகின்றது. (க-39)

## இன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் எஸ். சக்திகிரீவன் எழுதிய ''முருகன் புகழ்'' என்னும் நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை தொண்டமனாறு சன்னதி ஆச்சிரமத்தில் நடைபெறுகின்றது.

இந்த வெளியீட்டு விழாவிற்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். கோபால கிருஷ்ண ஐயர் தலைமை தாங்குகின்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமி, நீர்வேலி கந்தசாமி கோவிலின் பிரதம குரு இராஜேந்திரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவர் நா. ஞானகுமரன் இந்நூல் பற்றிஆய்வுரை நடாத்துவார் என அறிவிக்கப்படுகின்றது. (க-77)

## இன்று வகுப்புக்கள் நடைபெறாது

(புலோலி)

யாழ்.பல்கலைக்கழக புறநிலை அலகின் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வரும் 'ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமைநடைபெறாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகுப்புக்கள் 5ஆம் 6ஆம் திகதிகளில் வழமை போல் நடைபெறும் என, பயிற்சி நெறிகளின் இணைப்பாளர் செல்வி ஏ.கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (க-52)

## திருத்தப்படாத பாலம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு ஆத்தங்கரையோடையில் அமைந்துள்ள பாலம் நெடுங்காலமாகத்திருத்தப்படாமல்இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இறந்தவர்களைத் தகனம் செய்வதற்குரிய மயானத்திற்கு இப் பாலத்தினுடாகவே செல்ல வேண்டியுள்ளமையால் பெரும்—

சிரமத்தை பொதுமக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. (க-82)

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனையும், மாசி மகப் பெரு விழாவும் எதிர் வரும் புதன்கிழமை 9 ஆம் திகதி தொடக்கம் 11 தினங்களுக்கு இடம்பெறும். (க)

# மனித உரிமைகளுக்கு பாடுபட்டவர் கலாநிதி நீலன் திருச்செல்வம்

## குஜ்ரால் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்ததோடு அவற்றுக்காக தன்னால் இயன்றவரை பாடுபடும் உலகில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களில் கலாநிதி நீலன் திருச்செல்வமும் ஒருவர் என்று இந்திய முன்னாள் பிரதமர் இந்திர் குமார் குஜ்ரால் தெரிவித்தார்.

காலிமுகத்திடல் ஹோட்டல் ஒன்றில் கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் 56 வது பிறந்த தின நினைவுநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

ஒருமனிதனின் உரிமைகள் அவனது கௌரவம், ஜனநாயக கட்டுப்பாடுகள் சட்டரீதியான கட்டமைப்புக்குட்பட்ட நாகரிக சமூகம் என்பன பற்றி நீலன் திருச்செல்வம் கொண்டிருந்த கருத்துக்கள் அளப்பரியவை.

என்னுடைய இலங்கை விஜயத்தின் போது என்னைக் கவர்ந்தவர்களில் நீலனும் ஒருவர். உலகம் முழுவதிலுமுள்ள அரசுமுறைகள் பற்றிய ஆழமான அறிவைக் கொண்டிருந்தவர். சகலரும் கௌரவத்துடனும், சுதந்திரத்துடனும் ஐக்கியத்துடனும் வாழ வேண்டும் என்பதே அவரின் குறிக்கோளாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (க-4)

## கணனிப் பிரயோக உதவியாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(இளவாலை)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் கணனிப் பிரயோக உதவியாளர் பயிற்சி நெறிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் க. பொ. த. [சா/த] பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தும் விண்ணப்ப முடிவுத் திகதி அன்று 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். முழுப்பெயர், பிறந்த திகதி தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை ஆகியவற்றுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர தபாலகத்தில் மாற்றும் வகையில் அதிகார சபைத் தலைவரின் பெயருக்கு பெறப்பட்ட ரூபா 100/- பெறுமதியான காசுக் கட்டளையுடன் 01-03-2000 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-12)

# விளையாட்டுச் செய்தி

## நாளைய தினம் ஆரம்பமாகும் உதை பந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகப் பிரிவு அனுசரணையுடன் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டிகள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை 5 ஆம் திகதியில் இருந்து 9 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ் உதைபந்தாட்டப் போட்டிகளில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், கிறீன்கிங்ஸ்விளையாட்டுக்கழகம், கலைவாணி விளையாட்கழகம், பாடுமீன் விளையாட்டுக் கழகம், கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக்கழகம், கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம், சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் விளையாட்டுக் கழகம், ஜெட்லைனர்ஸ் விளையாட்டுக் கழகம், பாரதிவிளையாட்டுக்கழகம், சென் நீக்கலஸ் விளையாட்டுக் கழகம், ஆகிய 11 அணிகள் பங்குபற்றவுள்ளன. (க-9)

## விளையாட்டு போட்டி

யா. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. பாடசாலை அதிபர் திரு. ச. சிவனேஸ்வரன் தலைமையில் இப் போட்டிகள் இடம் பெற்றன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா கலந்து கொண்டார். (க-77)

## உதைபந்தாட்ட போட்டிகள்

(புலோலி)

வடமராட்சி உதைபந்தாட்ட சங்கத்திற்குட்பட்ட அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் எம்.செல்லத்துரை ஞபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் லீக் சுற்றுப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 12ஆம்திகதியும் 13ஆம்திகதியும் நடைபெறுகின்றன. லீக்சுற்றுப் போட்டியில் 8கழகங்கள் பங்குபற்றி வருகின்றன, (க-52)


பச்சைத் தமிழனாக காட்சி தந்த
''குமாரே'' எங்கு சென்றாய்
கலங்குகின்றோம்.

ஜீ. ஜெயப்பிரகாஷ்

ஜெயா இயந்திர மர அரிவு ஆலை

JEYASAWING & PLANNINGMILL

ஆறுமுகம் சிற்பாலயம்
காளி கோவிலடி, திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.
(கி/51)

கூப்பிட்ட குரலுக்குஓடிவந்த குமாரே
தலைவனே உன்ஆத்மா சாந்தியடையட்டும்

வேணுகா VENUGA
தொலைத் தொடர்பு நிலையம்
உள்நாடு: 021 - 2541 021 - 2845
வெளிநாடு: 0094 - 21 - 2541
0094 - 21 - 2845
பக்ஸ் வசதியும் பெற்றுக்கொள்ளலாம்
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(கி/54)

எல்லோர் மனத்திலும் நீக்கமற
நிறைந்த எம் தலைவா குமார் ''கலங்குகின்றோம்''

பாலகிருஷ்ணா ஆபரண மாளிகை
தங்க நகை மெசின் கட்டிங்
MACHINE CUT JEWELLERY
இல. 614, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
இல. 86, நல்லூர் குறுக்கு வீதி.
(கி/53)

[illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்
- குறள்

# வலம்புரி

## நிர்வாகக்கதிரைகளில் கலையுள்ளங்கள்

மக்கள் பெருங்கடல் நான் என்றுகூவு என்பது புரட்சிக் கவிஞன் பாரதி தாசனின் இதயநாதம். மக்கள் சேவைக்கு அமர்த் தப்படும் நிர்வாகிகள் தூரவும் பார்க்க வேண் டும் மக்களையும் புரிந்து ணர்வுடன் செயற்பட வேண்டும். வீட்டிலே, சமூ கத்திலே முதலில் சுதந் திரஸ்த்திரம் துளிர்விடட் டும்.

இன்னற்பட்டு இருவிழி நீர் சொரியும் மக்களுக்கு சேவைக்கு அமர்த்தப் பட்டு காலத்தின் தேவை கருதிச் செயற்படும் கலை யுள்ளங்களையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகி றோம். பாரம் பரியமாக அறிஞர் பெருமக்கள், கலைஞர்கள் தோன்றி பெருமை தேடித்தந்த மண் வலிகிழக்கு. அதன் பிரதேச செயலராக நிர் வாகக் கதிரையில் அமர்ந் துள்ள கேதீஸ்வரன் பிர தேச மேம்பாட்டைத் தன் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவ தும் கலைகள் மிளிர கவ னம்கொள்வதும் பாராட் டிற்குரியது.

இன்றைக்கு யாழ். மண் ணின் நிர்வாகக் கதிரை களைஅலங்கரிக்கும் கலை யுள்ளங்களை வரிசைப் படுத்தும்போது மேலதிக அரச அதிபர் வைத்தி லிங்கம், உதவி அரச அதி பர் ப. திலகநாயகம் போல், வங்கி முகாமை யாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோகிலா மகேந்திரன், உதவிக் கல் விப் பணிப்பாளர் செம் பியன் செல்வன் போன்ற பலரை மறக்க முடியாது. அவர்களுடைய மக்கள் மயசிந்தனைகள், பிரதேச உண்மைகள் உள்வாங்கி உழைத்தல் என்பன போற்றுதற்குரியவை.

பணிக்கு அணி செய் வது எளிமையும் இனி மையும். புரிந்துணர்வும். தளனோக்கில் மேலே பணி செய்பவர்களை அனுபவரீதியில் உணர்ந் திருக்கின்றனர் மக்கள். இது போன்ற நீறு பூத்த நெருப்பில் நடப்பவர் களை குளிர்மைப்படுத் தும் குணவான்களை, குணவாட்டிகளை குவல யம் வேண்டிநிற்கிறது.

உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைபவர்களையே மக் கள் வெள்ளம் வேண்டி நிற்கிறது. காலம் கனிய கண்ணியமான கர்மவீரர் களை, வீராங்கனை களை மண்ணுக்குதவ வேண்டி நிற்கிறோம். வாழ்வியல் உண்மை புரிந்த கலையுள்ளங்கள் வளரட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# ஈழத் தமிழ் மக்களுக்காக ஒலித்த குரல்
# புத்தாயிரமாம் ஆண்டு ஆரம்பத்திலேயே ஓய்ந்தது

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 31-ம் நாள் நினைவு தினத்தை ஒட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

ஆ-ர்

அந்த நாளை நினைத்துப் பார்க்கிறேன். மலை போல் நிமிர்ந்து நினைத்ததை அச்ச மின்றி ஈழத் தமிழருக்காக குரல் கொடுத்த தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட் டார் என்ற செய்தி ஊட கங்களில் ஒலித்துக் கொண் டிருக்கிறது. உண்மைதானா? நம்ப மறுத்தவர் பலர் நினைத்துக்கூடப் பார்க்க விரும்பாத பலரில் நானும் ஒருவன் அப்படி நடக்கவும் மாட்டாது. நடந்துவிடும் என்று மானமுள்ள தமிழன் எவனும் கூறவும் மாட்டான். என்று சொல்லியவர்கள் எல் லாம் சோகமே தாளாமல் வாய் விட்டு அழுதனர். குமுறினர் குமாருக்கா இது நடந்தது...? என் தம்பி போய்விட்டியா என அழுது புலம்பினர்.

மாதமும் ஒன்றாகி விட்டது. என்னோடு பழகி எனக்கு ஆறுதல் கொடுத்த. கூப்பிட்ட குரலுக்கு குரல் கொடுத்த தலைவர் குமார் பொன்னம்பலம் இறந்து விட் டார். என்று கூறாமல் மனிதருக்குள் மாணிக்க மாக எமக்கெல்லாம் தெரி யாமல் வாழ்ந்து கொண் டிருப்பதாகவே நான் கருது கிறேன்.

அறுபதைக் கடந்தால் புது வாழ்வு என்பார்கள். மணி விழாக்களில் மனைவி மக்க ளுடன் வாழ்பவர்களை இந்த வையகம் போற்றிப் பாராட்டுவது ஈழத் தமிழர் நியதி பிறருக்குத் துன்பமே நினைக்காத காசி நாதர், காங்கேசர் பொன் னம்பலம் என்னும் இயற் பெயர் கொண்ட குமார் பொன்னம்பலம் அறுபதைக் கடந்தும் வாழ்வார் என் றல்லவா நினைத்தனர். அன்பு மனைவி யோகலட்சுமி யாக இல்லறம் காக்கும் நல் லவளாக அமைந்ததால் தாயைப் போல வைத்தியத் துறையில் புகழ் பூத்த மக ளாக மிருலாஷினியையும்; தந்தையைப் போல பேர னைப்போல சட்டறிஞராக கஜேந்திரகுமாரையும் இறை வன் அவருக்குக் கொடுத் திருந்தார். இந்த இரு செல் வங்களின் சுப நிகழ்ச்சியை வாழ்நாளில் பார்க்கக் கொடுக்காமல் ''சாந்த'' என்ற சாத்தான் யமனாக வந்து இந்த நல்ல உள் ளத்தை கொடிய துப்பாக்கி யால் சுட்டு உயிரைக் குடித் தாலும் நாடும் ஏடும் நற் றமிழ் உலகும் குமாரை மறக் குமா? மறக்கவும் முடியுமா? அவர் வாழ்வு நித்தியவாழ்வு.

குமாரின்வாழ்க்கை சுவாரிஸ் யம் மிக்கது, பணத்தின்செருக் கில் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவர் அவர். சுகபோகத் தில் திளைத்திருக்கலாம், கல்வியை மதித்தார், தந்தை யைப்போல தானும் வர ஆசைப்பட்டார், கல்வியில் ஊக்கம் காட்டினார், தந்தை பொன்னம்பலத்தின் சுட்டு விரலுக்கு தமிழர்கள் மட்டு மல்ல சிங்களவர்களும் கட்டுப் பட்ட காலம் ஒன்றுஇருந்தது. தனது மகனை உலகின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் சேர்த்துசெல்வத்தால்எதனை யும் விலையாக வாங்கியிருக் கலாம். தந்தை அப்படி நினைக்கவில்லை சாதாரண மக்களைப் போல் 'குமாரும்' கொழும்பு றோயல் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் பற் றிக்ஸ் கல்லூரி, அக்குவனாஸ் பல்கலைக் கழகத்தில் ஆரம்ப உயர் கல்வியைப் பெற்றுச் சாதனை படைத்தார். இளம் மாணவனாகஇருக்கும்போது துடிப்பாகப்பேசுவார் குமார். மாட்டேன் மாட்டேன் என உண்மைக்கு மாறானவிடயங் களில் அடம்பிடிப்பது அவரது இரத்தத்தில் ஊறியது. யாரா வது ஏதும்கேட்டால் அதனை நிறைவேற்றுவதில் அவருக்கு மனதிலேஉற்சாகம்இருக்கும். போட்டி என்று வந்தால் வெற்றி தோல்வியென்று சிந் தியாமல் களம் காண்பதில் தாளாமகிழ்ச்சி மனத்தில் இழையோடியிருக்கும். முடி யாது என்று கூறுவது கோழை களின் கடத்து என அடிக்கடி கூறுவார்.

இளமைத்துடிப்புடன் கல் வியில் அவர் பெற்ற வெற்றி களையும் கருத்தில் கொண்டு அப்பாவைப்போல தானும் சட்டத்தில் சாணக்கியனாக இருக்க வேண்டுமென்று குமார் விரும்பியதால் தந்தை யார்அவரைலண்டன்'கிங்ஸ்' பல்கலைக் கழகத்தில் சட்ட மாணிக் கற்கைநெறியையும், கேம்பிறிஜ் பல்கலைக் கழகத் தில் சட்ட முதுமாணிப்பட் டத்தையும் பெற்று புதிய சட்ட வல்லுனராக வெளி யேறினார். பின்னர் லண்டன் லிங்டன் டின் பாரிஷ்டராக உயர்வு பெற்றார்.

1977 ஆம் ஆண்டு அரசி யலில் பிரவேசித்த அவர் யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டாலும் அவரது திறமையையும், பேச்சுவன் மையையும் கண்ட யாழ்ப் பாண மக்கள் ஒரு சுயேட்சை வேட்பாளருக்கு அதிக வாக் குகளை அளித்தனர்.

துரதிஸ்ட வசமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு செல்வாக்கு அதிகமாக இருந் தமையால் தோல்வியைத் தழுவிக்கொண்டார். பின் னர் 1987ல் இலங்கையில் எந்தவொரு தமிழனும் நினைத்துப் பார்க்காத நிலை யில் இருந்தபோது ஒரு தமி ழன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். எனக்கே வாக்களியுங்கள் என்று கொழும்பு சுற்றுப்புறங்களில்



குமார் பொன்னம்பலம்

முழங்கினார். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என தந்தையைப் போல அவரது ஜனாதிபதி வேட்பாளர் உரை அமைந் திருந்தது.

உணர்ச்சியற்ற முடங்க ளாக வாழ்ந்த கொழும்பு வாழ் தமிழர்கள் ''இவ னுக்குத் தேவையில்லாத வேலை'' எனச் சாடியதும் உண்டு.

1998ல் அவரது சிந்தனை பயங்கரவாதத் தடைச் சட் டத்தால் வழக்குகளைச் சந் தித்த ஈழத் தமிழர் பக்கமே

### தமிழன்

திரும்பியது. பயங்கரவாத வழக்குகளில் ஆஜராகுபவர் கள் ''பயங்கரவாதிகள்'' என மகுடம் சூட்டப்பட்ட போதெல்லாம், தான் தமி ழீழவாதி எனக் கூறி அவர் களின் வழக்குகளில் ஆஜரா னார். எந்தவித லாபமும் கரு தாமல் வழக்காடிய வழக்க றிஞர் குமார்தான். இன் னும் எத்தனையோ அபலங் கள் ''குமார் அண்ணன்'' காப்பாற்றுவார் என்று மன அமைதிபெற்ற வெஞ்சிறை யில் வாடும் பஞ்சு உள்ளங் கள் தங்கள் தலையில் அடித் துக் கதறுகின்றன. அந்த நன்றியுணர்வுதான் குமா ரைத் தலைவராக்கியுள்ளது. குமார் எங்கு சென்றாலும் ஈழத்தமிழன் இருந்தமை பற்றி முழங்காமல் நாடு திரும்புவதில்லை.

ஐக்கியநாடுகள் மனித உரி மைகள் நிறுவனம் முதல் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து டென்மார்க், ஜேர்மனி, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் எல்லாம் ஈழத்த மிழர் அவலத்தை எடுத்து ரைத்து வந்தார். சிக்கல் நிறைந்த காலகட்டத்தில் கிருஷாந்தி கொலை மட்டு மல்ல செம்மணி வரலாறு வரை அந்த மனிதர் தான் இலங்கை அரசின் கபடத்தை வெளியுலகிற்கு துலாம்பர மாக எடுத்துக் காட்டினார்.

## ''பேசுகிறான் சுதந்திரம்''

அண்டை நாடு
அன்னியராட்சி அடிமைத்தளை
அகிம்சை! அசைத்தது
ஆதவன் மறையாநாடு
ஆட்டம் கண்டது
அடைந்தோம் சுதந்திரம்
முந்நூறு ஆண்டுகள்
விட்ட இடம் தொடவில்லை
தொடர்ந்த இடத்தில் தொடங்கினோம்
சுதந்திரம்!
விளைச்சல் அறுவடையாயிற்று
பிரஜாவுரிமை
சிங்களமொழி மூலம்
தரப்படுத்தல்
சுதந்திரம்! விடுதலையாயிற்று
வன்முறை தொடரலாயிற்று
படுகடன் சுமையாயிற்று
தங்கிவாழ்தல் வாழ்வாயிற்று
பணிப்பெண் வேலையாயிற்று
அகதி அடையாளமாயிற்று
ஆரோ அசைக்கிறான்
ஆடுகிறோம் பகடை
சுதந்திரம்!
தன்னை ஏற்காத
வன்மம்
வாழ்வை மறுக்கும்
விகாரம்
உண்மை உணரா
உன்மத்தம்
மனிதம் காணாத
மனிதன்
தன்னை சிறைப்படுத்தி
பேசுகிறான்
சுதந்திரம்

திலகரட்ணம்

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தேர் வும் ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 19ம் திகதி (சனிக் கிழமை) பல்கலைக்கழகத் தில் நடைபெற உள்ளது.

## (இராசி பலன்)

04.02.2000 வெள்ளிக் கிழமை
(தமிழுக்கு தை 21)

சதுர்த்தசி இரவு 6.16 வரை: உத்தராடம் இரவு 7.58 வரை, சித்த யோகம், இராகு காலம் காலை 11.36 முதல் 1.04 வரை, சுபநேரம் காலை 7.05 முதல் 8.35 வரை.

**மேடம்:**
விரோதிகள் உதவி, தொழில் மேன்மை, உற்சாகம்.

**இடபம்:**
குழம்பித் தெளிதல், குடும் பப் பிரிவு, மனச் சுமை.

**மிதுனம்:**
குடும்பப்பற்றின்மை, தொழில் நஷ்டம், புத்திரர் கவலை.

**கடகம்:**
இனிய உறவு, திட்டமிடல், கல்வி ஞானம்.

**சிங்கம்:**
பகைவரை வெல்லல், நண் பர் பாராட்டு, தியாகசிந்தை,

**கன்னி:**
கெட்ட கனவு, உடல் உபாதை, தொழில் கஷ்டம்.

**துலாம்:**
தப்பபிப்பிராயம், விரோ தித்தல், பிறர் குறை.

**விருச்சிகம்:**
பொதுப்பணி, தாயார் அறிவுரை, ஆடை லாபம்.

**தனுசு:**
வீண் சச்சரவு; மாமனார் கோபம், சஞ்சலம்.

**மகரம்:**
உறவினர் மகிழ்ச்சி, விருந் துண்ணல், சுபச் செய்தி.

**கும்பம்:**
எதிர் வாதம், காரியத் தடை, அமைதியடைதல்.

**மீனம்:**
தொழில் வழிச் சிறப்பு, அறி ஞர்சந்திப்பு, காதல் கனவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

### சித்திரவதைக்கு உள்ளான

# தமிழ் இளைஞனுக்கு 50 ஆயிரம்ரூபா நட்ட ஈடாக செலுத்தவேண்டும்

## கொழும்பு உயர்நீதிமன்றம் தீர்ப்பு

[கொழும்பு]

கடந்த வருடம் வவுனியாவில் கைது செய்யப்பட்டு கொழும்பு உயர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட தமிழ் இளைஞனுக்கு 50ஆயிரம்ரூபா நட்டஈடாக செலுத் வேண்டும் என மேற்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரஸ்தாப இளைஞன் வவுனியாவில் கைது செய்யப்பட்டதையடுத்து கொழும்பு மற்றும் களுத்துறை போன்ற சிறைக்கூடங்களில் சித்திரவதைத் குள்ளாக்கப்பட்டதாக தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதிகளே மேற்கண்ட உத்தரவை வழங்கினார்.

இளைஞர்கள் சார்பில் சட்டத்தரணிகளான பேரின்பம் பிறேம்நாத், செல்லையா செல்வரத்தினம் ஆகியோர் ஆஜராகியமை இங்கு குறிப்பிடத்தக்கது. [வ - க]

## புளொட்அமைப்பின்இராணுவப்பிரிவு

# முன்னாள் தளபதி மாணிக்கதாசனின் மாமியார் கைது செய்யப்பட்டார்

(வவுனியா நிருபர்)

இறம்பைக்குளம் சங்கரப்பிள்ளை ஒழுங்கையில் வீடு ஒன்றில் சடலமாக மீட்கப்பட்ட புளொட் உறுப்பினரான விஜயன்மரணம் தொடர்பாக புளொட்அமைப்பின் இராணுவப் பிரிவுத் தலைவர் காலஞ்சென்ற மாணிக்கதாசனின் மாமியார் திருமதி முத்துராசா ஜெயசீலி வயது 48 கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் புதன் கிழமை வவுனியா மாவட்ட நீதிவான்எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும்14 ஆம்திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். சந்தேகநபராக கைது செய்யப்பட்டவரின் வீட்டிலிருந்தே விஜயனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பாதுகாப்பு...

பஸ்ஸினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டு சாரதியின் ஆசனத்திற்குப் பின்னால் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு அதி உச்சபாது காப்பு ஏற்பாடுகள்திடீர்சுற்றிவளைப்புகள் தேடுதல்,கைது செய்தல் ஆகியவற்றிற்கு மத்தியில் பெரும் எண்ணிக்கையான உயிரிழப்புக்களைத் திட்டமிட்ட முறையில் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புத் துறையினரின் அசமந்தப் போக்கினையும் இக்குண்டு வெடிப்புக்கள் எடுத்துக் காட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். (வ)

### மன்னம்பிட்டி . . .

விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்திடமும் முறையிட்டுள்ளார்,

## மட்டுவிலில் மினி சூறாவளி

[தென்மராட்சி]

மட்டுவில் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் காலை9-45மணியளவில் மினி சூறாவளி வீசியதில் பனைமரம், வேம்பு போன்ற பயன்தரு மரிங்கள் பலவும் முறிந்து வீழ்ந்தன. வீடுகளின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த ரீ.வீ அன்ரனாக்கள், வீதிகளில் அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் பலவும் வீழ்ந்தன.

## வலைப்பந்தாட்டப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக நடாத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம், மகாமாரி விளையாட்டுக்கழகம், சோலையான் விளையாட்டுக் கழகம், இருதயராஜா விளையாட்டுக் கழகம். காந்திஜி விளையாட்டுக்கழகம் என்பன மோதுகின்றன.

### காங்கேசன்துறை...

பர் மாதம் 18ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் ஒட்டுமடம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி விமலசேனாதிராஜா என்ற நபர் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். 14

# அச்சுவேலி அரசினர் மருத்துவமனையில் புதிய பற்சிகிச்சை நிலையம் அமைப்பு

[அச்சுவேலி]

அச்சுவேலி அரசினர் மருத்துவ மனையில் புதிதாக அமைக்கப்பட்ட பற்சிகிச்சை நிலையம் பெண் நோயாளர் விடுதி மற்றும் புனரமைப்புச் செய்யப்பட்ட ஆண் நோயாளர் விடுதி ஆகியன எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக வைத்தியகலாநிதி நா. சிவபாதம் கலந்து கொள்கிறார்.

கடந்த பல வருட காலமாக தற்காலிக சிகிச்சை நிலையத்தில் இயங்கி வந்த பற்சிகிச்சை நிலையம் புதிய கட்டடத் தொகுதியில் இயங்கவிருப்பதனால் இதுவரை காலமும் வைத்திய சாலையில் நிலவிவந்த இடநெருக்கடி பெருமளவு குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. [க-57]

# அமரர் குமாரின் நினைவஞ்சலி கூட்டம் நாளை நெல்லியடியில் இடம்பெறும்

(புலோலி)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் சட்டத் தரணியுமான அமரர் குமார் பொன்னம்பலத்தின் அஞ்சலிக்கூட்டமொன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை 5-ம் திகதி பி. ப. 1. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சங்க நிர்வாக சபை உறுப்பினர் திரு. சாம். செபஸ்ரியான்தலைமைதாங்குகிறார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் என். பாலச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா உட்பட கல்வியாளர்கள் பலரும் இவ் வைபவத்தில் கலந்து கொள்வர். (க-52)

### வவுனியா...

பதிவுத்தபால் அனுப்புவதற்காக கணவனும், மனைவியும் தபாலகத்திற்குச் சென்றசமயமே குண்டு வெடிப்பில் சிக்கிக் கொண்டனர்.

பிரஸ்தாபப் பெண்ணின் மரணத்தைத் தொடர்ந்து வவுனியா குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மரணமானோரின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. (க-வ)

### ஐ. தே. கட்சி...

தான் கட்சியின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமைய முடியும்.

ஐக்கியதேசியக் கட்சியில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துமுகமாக நம்முடன் இணைந்து செயல்ப் படுவதுடன் கட்சிக்குப் புதிய தலைமையை பெற்றுக் கொடுப்பது சம்பந்தமாக தீர்க்கமாக ஆராய வேண்டுமென்றும் சரத் அமுனுகமவை உள்ளிட்ட மாற்று அணியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மேற்படி நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவும் நிறைவேற்றுக் குழுவும் கூடி விவாதிக்க உள்ளதாகவும் ஆதாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சி மாற்றுக்குழு உறுப்பினர்கள் மனுமீதான தீர்ப்பு இரண்டாம் பக்கத்தில் பார்க்கவும்.

## நிலக்கண்ணி அகற்றப்படும்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிக்கு நிதி உதவி புரிய அவுஸ்திரேலியாவும், நெதர்லாந்தும் முன்வந்துள்ளதாக ஆதாரபூர்வ தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

நிலக்கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் 16 பேர் யாழ்ப்பாணம் வந்ததும் நிலக் கண்ணி அகற்றும் பணி முன்னெடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### வெளிநாட்டு...

தமது விஜயத்தை நிறுத்தி வருகின்றனர்.

வன்னிப் பிரதேசம் என்பது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியது. ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண நிறுவனங்கள் பல வன்னியில் செயல்படுகின்றன. எனவே தயக்கமின்றி வன்னிக்குவந்து செல்லலாம். (வ-க-103)

### அநியாய ..

தார்.

திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவரது வீட்டில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டும், பொன்.சிவபாலன் யாழ்.மாநகர சபைக் கட்டடத்தில் வைத்து கிளைமோர் தாக்குதலிலும் கொல்லப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. வ.க 103


## வாழ்த்துகின்றோம்

செல்வன் லக்மன் சத்தியமூர்த்தி அவர்களின்

**மிருதங்க அரங்கேற்ற விழா**

ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் இன்று பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திரு.திருமதி சத்தியமூர்த்திகஜநிதி தம்பதிகளின் ஏகபுதல்வன்

**செல்வன் லக்மன் சத்தியமூர்த்தி**

அவர்களின் மிருதங்க அரங்கேற்ற விழா சிறப்புற அமைய நல்லைக் குமரன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவில் மேற்கு
சைவப்பாடசாலை வீதி மக்கள்

(சி-50)

## வாழ்த்துகின்றோம்

செல்வன் லக்மனின்

**மிருதங்க அரங்கேற்ற விழா**

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திரு. திருமதி சத்தியமூர்த்தி கஜநிதி தம்பதிகளின் ஏக புதல்வன்

**செல்வன் லக்மனின்**

மிருதங்க அரங்கேற்ற விழா சிறப்பாக நடைபெற நல்லூர்க் கந்தன் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி வாமதேவன்
குடும்பத்தினர்.

சைவப்பாடசாலை லேன்
கோண்டாவில் மேற்கு. (க-49)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
அர்ஜுன், மனுஷா கொய்ரலா, ரகுவரன் நடித்த

**முதல்வன்**

(CD பிரதி)
4 நாட்கள் மட்டும்
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார் தேவயாணியின்

**சூரிய வம்சம்**

(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

## 31 - வது நாளில் நினைத்துப் பார்க்கிறோம்

**எம் தலைவர் குமார்**

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோகுலம்
தொலைத் தொடர்பு சேவை
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
ஆனைக்கோட்டை.
உள்நாட்டு, வெளிநாட்டு நேரடி
இரவு, பகல்,
தொலைத் தொடர்பு சேவை
உள்நாடு: 021 - 3107
வெளிநாடு: 0094 - 21 - 3107

(சி-58)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.